07 APR




# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 26 வெள்ளிக்கிழமை (07 - 04 - 2000) VALAMPURI ஒலி: 110


## ★கிளாலியுத்தகளத்தில் நேற்றுவரை சிக்கித்தவித்த மக்கள்

## உடன்வெளியேறினர்

கடந்த ஒருவார காலமாக கிளாலியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சுமார் 1500 அப்பாவிப் பொதுமக்கள் நேற்று தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிவழங்கப்பட்டதைத் தொடர்ந்து மூட்டை முடிச்சுகளுடன் சாரிசாரியாக வெளியேறி கால்நடையாக மிருசுவில் தேவாலயத்தை வந்தடைந்தனர்

(யாழ்ப்பாணம்). விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினர்க்குமிடையே பளைப்பகுதியில் ஏற்பட்ட பாரிய மோதலில் சிக்கியிருந்த சுமார்1500 பொது மக்கள் கிளாலி புனிதஅந்தோனியார் ஆலயத்திலும் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதிகளிலும் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இவர்கள் கடந்த ஒரு வார காலமாக தம்முடைய உறவினர்களை பிரிந்த நிலையில் செய்வதறியாது பல இன்னல்களை அனுபவித்திருந்தனர்.

இவர்களது இத்தகைய நிலையினை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும்எடுத்துக் காட்டும் வகையில் பல்வேறு பொது அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் குரல் கொடுத்திருந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ அனைத்து மக்களையும்

## வெளியேற அனுமதிக்கும் வரை வகுப்புக்களைப் பகிஷ்கரிக்க முடிவு

### பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாசார், அரசர்கேணி, தம்பகாமம், சோரன்பற்று, முல்லையடி, தர்மக்கேணி, ஆகிய இடங்களில் சிக்கியுள்ள மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு வெளியேறிச் செல்வதற்கு அனுமதிக்கப்படும்வரையாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் இன்று முதல் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கப்போவதாகவும் அத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செயலகமுன் நேற்று மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியில் நடைபெறும் போர் சூழல் காரனமாக இடம் பெயர்ந்து பாதுகாப்பான சூழலில் தஞ்சமடைய முடியாது மனித கேடயமாக சிக்கியுள்ள மக்களை உடன் பாதுகாப்பான பிரதேசத்துக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை உடன் எடுக்கவேண்டும் எனக்கோரி யாழ் செயலகம் முன்பு மறியல் போராட்டம் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது

நீதிக்கும் சமாதானத்துக்குமான நல்லெண்ணக் குழு

[6ஆம் பக்கம் பார்க்க]

## மறியற் போராட்டத்தில் ஒலித்த கோஷங்களும் சுலோகங்களும்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். செயலகம் முன்பு இடம்பெற்ற மறியற் போராட்டத்தின் போது போராட்டத்தில் கலந்து கொண்டோர் தாங்கியிருந்த சுலோகங்களும் கோஷங்களும் வருமாறு;

★ ஜெனிவா உடன்படிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்உயிரிழப்பு

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையிலும் 2 ஆம திகதி மாணலாற்றுப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களின் போதும் தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விவ

(6ஆம்பக்கம் பார்க்க)

## மிருசுவிலில் தங்கி உள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுகிறது!

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதியில் தஞ்சமடைந்திருந்த மக்கள் அங்கிருந்து வெளியேற அனுமதித்தை அடுத்து மிருசுவில் பகுதி தேவாலயத்திலும் மற்றும் இடங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துப்பீட மாணவர்களுக்கு மாணவர் ஒன்றியம் அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பளை மற்றும் இடங்களிலிருந்துவெளியேறிவரும் மக்களுக்கு உதவிகள் செய்வது தொடர்பான அவசர பொதுக் கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற

(6ஆம் பக்கம் பார்க்க)

## பி.பி.சி. செய்தியாளர் புத்தபிக்குகளால் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

நேற்றுமாலை நடைபெற்ற சிங்களப் பேரினவாதிகளின் ஆர்ப்பாட்டப் பேரணியின் போது பி.பி.சியின் சிங்கள சேவை செய்தியாளரான எல்மோ பெர்ணான்டோ புத்த பிக்குகளால் தாக்கப்பட்டுள்ளார்.

பி.பி.சியையும் எல்மோ பெர்ணான்டோவையும் எதிர்த்து கோஷம் எழுப்பிய ஆர்ப்பாட்டக் காரர்கள் அக் கோஷங்களைப் பதிவு செய்ய முயன்ற இவரை தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதல் நடைபெறும்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ★ கிளாலியிலிருந்து

## களைத்து சோர்ந்து வந்த மக்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

கிளாலி அந்தோனியார் தேவாலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அப்பாவிப் பொது மக்களுக்கு யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம் தம்மாலான உதவிகளைச் செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூட்டை முடிச்சுக்களுடன் சுமார் 4 மைல் தூரம் கால்நடையாக நடந்து வந்த மக்களுக்கு அவர்களது பரிதாபகரமான நிலையினைக் கவனத்தில் கொண்டு தாங்கள் சென்ற வாகனங்களை அவர்களை ஏற்றி இறக்க கொடுத்துதவினர். அத்துடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியிலும் கிளாலி அகதிகள்

(புலோலி)

நேற்றுக் கிளாலிப் பகுதியிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்ட மக்களில் ஒரு தொகுதியினர் வடமராட்சிப் பகுதிக்கும் சென்றுள்ளனர்.

வடமராட்சிப் பகுதிக்கு சென்ற மக்களை உறவினர்களும் நண்பர்களும் வரவேற்று உபசரித்ததுடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

52

## பளையில் இருந்து இடம் பெயர்ந்தோர் விபரம் திரட்டப்படுகிறது

(சங்கானை)

கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளினால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது யாழ்குடா நாட்டின் ஏனைய பகுதிகளில் வசித்து வரும் மக்கள் தமது விபரங்களை அப்பகுதி கிராமசேவை அலுவலர்களிடம் உடனடியாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதற்காக அவர்களுடைய குடும்பத் தலைவரின் முழுப்பெயர் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை முன்னர்

[6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனில் தஞ்சம் கோருவோரை கட்டுப்படுத்த புதிய நடைமுறைகள்

(கொழும்பு)

பிரிட்டனில் தஞ்சம் கோருபவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சில புதிய நடைமுறைகளை அந்நாட்டரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

பணத்திற்குப் பதிலாக உணவு வவுச்சர்கள் வழங்கவும் சட்டவிரோதமாக குடியேறுபவர்களை கடத்தும் ட்ரக் உரிமையாளர்களுக்கு குற்றப்பணம் அறவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வசதியான பல சலுகைகளால் கவரப்பட்டு பெருமளவானோர் தஞ்சம் கோரு

(6ஆம் பக்கம் பார்க்க)

### ★ நோர்வே தலையீட்டை ★ ஐ.தே.க-அரசு பேச்சை

## கண்டித்து பௌத்த மகாசங்கம் சிங்கள பேரினவாதிகள் பேரணி

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக நோர்வே அரசின் சமரச முயற்சிக்கான தலையீட்டைக் கண்டித்தும் அரசியல் அமைப்புச் சீர் திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியும் அரசாங்கமும் மேற்கொண்டுவரும் பேச்சு வார்த்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த மகா சங்கத்தினரும் மாபெரும்ஆர்ப்பாட்டப்பேரணியொன்றை நடத்தினர்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இருந்து 2.45 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டப்பேரணி வாட்பிளேசை அடைந்தது.

இவ் ஆர்ப்பாட்டப் (6 ஆம்பக்கம் பாக்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

ஆங்கில மருந்து விற்பனையாளராக அனுபவமுள்ள பெண்பிள்ளைகளும் பழக விரும்பும் ஆங்கில அறிவுள்ள பெண்பிள்ளைகளும் தேவை. விபரத்துடன் நேரில் வரவும். குறிஞ்சி மெடிக்கல் பரமேஸ்வராச் சந்தி (சம்பஸ்) (281)

வீட்டு வேலைகளுக்கு 40 வயதுக்குட்பட்ட குடும்பப் பொறுப்பில்லாத பெண் வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசலாம். தொடர்பு குறிஞ்சி மெடிக்கல், பரமேஸ்வராசசந்தி. [சம்பஸ்] [281]


## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 6 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது,

### சங்கானை

| | |
|---|---|
| 141018 ஏ | 135587 ஏ |
| 135587 பி | 135587 சி |
| 135783 ஏ | 139587 ஏ |
| 139748 ஏ | 139748 பி |
| 139748 சி | 139787 ஏ |
| 139788 ஏ | 139788 பி |
| 139788 சி | 139789 ஏ |
| 139789 பி | 141220 ஏ |
| 141220 பி | 141310 ஏ |
| 141311 ஏ | 141311 பி |
| 141311 சி | 141311 டி |
| 141312 ஏ | 141326 ஏ |
| 141340 ஏ | 141340 பி |
| 141376 ஏ | 141376 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 134103 ஏ | 135536 ஏ |
| 136547 ஏ | 136547 பி |
| 136629 ஏ | 136630 ஏ |
| 139504 ஏ | 139504 பி |
| 139876 ஏ | 139902 ஏ |
| 139902 பி | 139917 ஏ |
| 139918 ஏ | 139923 ஏ |
| 139923 பி | 139923 சி |
| 139923 டி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 133298 ஏ | 136851 ஏ |
| 136765 ஏ | 139469 ஏ |
| 139469 பி | 139469 சி |
| 139469 டி | 139866 ஏ |
| 139896 ஏ | 239912 ஏ |
| 140894 ஏ | 140903 ஏ |
| 140950 ஏ | 141011 ஏ |
| 141011 பி | 141093 ஏ |
| 141093 பி | 141093 சி |
| 135490 ஏ | 135793 ஏ |
| 135793 பி | 138568 ஏ |
| 138568 பி | 139570 ஏ |
| 139570 பி | 139577 ஏ |
| 139577 பி | 139792 ஏ |
| 141240 ஏ | 141240 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 128909 ஏ | 129909 பி |
| 138456 ஏ | 138543 ஏ |
| 138548 ஏ | 138566 ஏ |
| 138614 ஏ | 139615 ஏ |
| 139616 ஏ | 139716 ஏ |
| 139809 ஏ | 141362 ஏ |
| 141373 ஏ | 141403 ஏ |
| 141403 பி | 141403 சி |
| 151403 டி | 141403 ஈ |
| 141403 எவ் | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 139600 ஏ | 139600 பி |
| 139617 ஏ | 139617 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 136383 ஏ | 136570 ஏ |
| 136570 பி | 141010 ஏ |
| 127322 ஏ | 135485 ஏ |
| 138495 ஏ | 138495 பி |
| 138496 ஏ | 138496 பி |
| 139724 ஏ | 141194 ஏ |
| 141194 பி | |

## தவக்கால சிந்தனை



### 31 ஆம் நாள்

கிறிஸ்தவர்களாகிய நாம் நற்செய்தியை அறிவிக்கும் பணிக்கு திருமுழக்கு பெற்றதிலிருந்து அழைக்கப்பட்டுள்ளோம். அன்று கிறிஸ்து பல வகைகளில் பல்வேறு இடங்களில் பலரை கண்டித்தும் பலரை வாழ்வித்தும் மணமாற்றியும் சிறந்த ஓர் நற்செய்தியாளராக தந்தை அனுப்பிய மெசியாவாக வாழ்ந்தார் ஆனால் உண்மை நீதி இவற்றை எந்த சமூகமும் எற்பதில்லை உண்மைகள் கசப்பானவை என்ற வகையில் இறையியல் மெசியாவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, எவரும் பணம், பதவி என்ற மட்டத்திலேயே அவர்கள் தமக்கான மெசியாவை எதிர்பார்த்தனர். இன்று எமது சமூகத்திலும் எவ்வளவு நற்செயல் செய்பவர்களையும் மற்றவர்கள் தமது சுடுசொல்லால் வஞ்சனையான செயலால் தூற்றுகின்றனர் ஆனால் எவ்வளவு சமூகத்தீமைகளில் சமூக அடக்கு முறைகளில் ஈடுபடும் ஒருவரை நாம் சுட்டிக்காட்ட தயங்குகிறோம் தீமைக்கு தூது போகிறோம் இத்தவக்காலத்திலாவது நீதிக்கு குரல் கொடுத்து கிறிஸ்தவ விழுமியங்களின் படி வாழ முன்வருவோமா.

டிலாந்தி
பாண்டியன்தாழ்வு

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு ஆகாயக் குளம் விநாகப்பெருமான் ஆலய வருடாந்தமகோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

10 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தின் போது சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும், திங்சட்கிழமை இரதோற்சவமும் இடம்பெற உள்ளது.

(க)

## மட்டக்களப்பில் இரவு வேளையிலும் பெண் ஆசிரியைகளின் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக் களப்பில் இரவு நேரத்திலும் பெண் தொண்டர ஆசிரியைகள் உண்ணா விரதம் இருந்து வருவதாக மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ். புவனேஸ்வரன் தினகரனுக்கு தெரிவித்தார்.

இரவு நேரங்களில் உண்ணாவிரதப் போராட்டத்தில் பெருந்தொகையான பெண்கள் ஈடுபட்டு வருவது மட்டக்களப்பு மாவட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்கநிகழ்வாகும். இவ் உண்ணா விரதிகளின் எண்ணிக்கையை தினமும் மாலை நேரத்தில் கணக்கெடுப்புச் செய்யும் பாதுகாப்புப் படையினர் இரவு நேரங்களில் பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டு வருவதாகச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக ஒருவாரமாய் சுழற்சி முறை உண்ணா விரதம் அனுஷ்டித்து வரும் இச் சங்கத்தினர் விரைவில் கோரிக்கை நிறைவேறா விட்டால் சாகும் வரை உண்ணா விரதத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் சங்கத் தலைவர் புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார், (க)

## கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபட்ட 22 பேரிற்கு எதிராக வழக்கு தாக்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் கள்ளச்சாரய உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்த இருபத்திரண்டுபேரிற்கெதிராகதென்மராட்சி மதுவரித் திணைக்களத்தினரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு குற்றப் பணங்கள் அறவீடு செய்யப் பட்டது.

கள்ளச்சாரய உற்பத்திக் குப்பயன்படும் கோடத்திரவம் வைத்திருந்ந குற்றத்திற்காகஎருவன்கொடிகாமத்தைச்சேர்ந்தகோகுலம்கந்தசாமிக்கு18,000 ரூபாவும், சரசாலை தெற்கைச்சேர்ந்தவர்களான யோகராஜா மைதிலி 15,000 ரூபாவும், மாணிக்கம் பாக்கியராணி 12,000ரூபாவும், முருகையா முத்தம்மா 12500 ரூபாவும், கைதடி தெற்கைச்சேர்ந்தவர்களர்ன சின்னத்துரை சின்னத்தம்பி 17,500 ரூபாவும், ஞானசோதி சோமசுந்தரம் 12500ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது.

மேலும் கள்ளச் சாராயம் விற்பனை செய்து வந்த மட்டுவிலைச்சேர்ந்த ஐவருக்குக்கும், கொடிகாமத்தினைச் சேர்ந்த மூவரிவிற்கும், மீசாலைச் சேர்ந்த இருவரிற்கும் கைதடியைச்சேர்ந்தஇருவருக்கும் சாவகச்சேரியைச் சேர்ந்தமூவருக்கும். நுணாவில் மேற்கைச்சேர்ந்த ஒருவரிற்குமாக 750 ரூபா முதல் 18000, ரூபாவரையான குற்றப்பணங்கள் அறவிடப்பட்டுள்ளது. (க-21)

## (இராசி பலன்)

07-04-2000,
வெள்ளிக்கிழமை

தமிழுக்கு பங்குனி 25 திருதியை இரவு 8.15 வரை பரணி பகல் 2.05 வரை சித்தயோகம், இராகு காலம் காலை 11.08 முதல் 12.30 வரை சுபநேரம் காலை 6 36 முதல் 8.06 வரை கார்த்திகை விரதம்.

**மேடம்:**
தியாகசிந்தை, தொழில் பெருமை, காரியசித்தி:

**இடபம்:**
அற்பர் நேசம், புத்திரர் கவலை,, அலைச்சல்:

**மிதுனம்:**
கூடிப்பேசுதல், குழப்பித் தெழிதல், சுபச்செய்தி.

**கடகம்:**
வாக்குவன்மை, அதிகவருவாய், பயணம்.

**சிங்கம்:**
அதிகாரிகள் வெறுப்பு, ஏமாற்றம், மனச்சோர்வு:

**கன்னி:**
கடன்படல், குடும்ப வெறுப்பு, வீண்வம்பு:

**துலாம்:**
காரிய வெற்றி, சகோதர உதவி, பழைய வரவு.

**விருச்சிகம்:**
அதிகாரிகள் பாரட்டு, நணபர் அறிவுரை, வீட்டில் சுபநிகழ்ச்சி.

**தனுசு:**
தடுமாற்றம், நோய் வேதனை, அகால உணவு.

**மகரம்:**
தந்திரோபாயம், வக்கிர உணர்வு, ஆவேசம்.

**கும்பம்:**
குடும்ப உதவி, எதிரிகள் உதவி, தாயன்பு.

**மீனம்:**
போட்டியில் தோல்வி, பயனற்ற செயல், காதல் தோல்வி.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

அனுஷியா

## தொடரும் திருப்பணி வேலை

[அரியாலை]

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய ராஜகோபுரத் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

[செ-106[

## எறிகணைத் தாக்குதல்

[இணுவில்]

கச்சாய் வெள்ளாம் போக் கட்டிப்பகுதி வீடென்றின் மீது அடுத்தடுத்து வீழ்ந்த எறிகணைகளால் வீடு பலத்த சேதமடைந்தது.

வி. லுத்நாயகம் என்பவருடைய வீடே எறிகணை விச்சினால் சேதமடைந்தது. என்றும் வீட்டிலிருந்த மூவரும் தெய்வாதீனமாய் உயிர் தப்பி விட்டனர்.

எனினும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் பெட்டி சேதமடைந்துள்ளது.

[சி-49]

## சைவப்புலவர் பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப்படும் வருடாந்த பட்டமளிப்புவிழா இம்மாதம் 23 ஆம் திகதி வண்ணை நாவலர் மகாவித்தியாலத்தில் இடம் பெறவுள்ளது.

(உ-49)


SALE SALE SALE

பண்டிகைக்கால சிறப்புத் தள்ளுபடிகள்

விரையுங்கள் RAM SILK

★ சாறி வகைகள் — ரூ. 250 முதல் - 450வரை
★ றெடிமெட் ரவுசர் — ரூ. 250
★ சேட்ஸ் — ரூ. 250 முதல் - ரூ 400 வரை
★ கவுண் துணி வகைகள்
★ ஸ்கேட்டன் பிளவுஸ் இன்னும் பல

"ராம் சில்க்"

109, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[சனி ஞாயிறு விற்பனையுண்டு] [V. S. B. குறூப் அருகில்]
கி/176

புத்தாண்டுக்கான மலிவு விற்பனை

விஷேட தள்ளுபடியுடனான விற்றுத்தீர்த்தல்.

இல. 06 கஸ்தூரியார் வீதியில்

அமைந்துள்ள எமது மலிவு விற்பனை நிலையத்தில் விஷேட தள்ளுபடியுடன் சகல பொருட்களையும் பெற்றுக் கொள்ள முந்திக் கொள்ளுங்கள்.

மோகனம் ரெக்ரைல்ஸ்

கபிலா காலணியகத்திற்கு அருகாமையில்

இல. 06 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி
இல. 41 நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

(கி/155)

நகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# பொதுஅறிவுவினாக்கள்

இல. 08 (தொகுப்பு:- ஜோன்சன்)

(1) எப்போது தபால்கள் முதன் முதலில் விமானத்தில் ஏற்றப்பட்டன? ……………………
(2) சூரியனிலிருந்து பூமிக்கு இடையிலான தூரம் குறைவாக இருக்கும் நாள் எது? ……………………
(3) சூரியனிலிருந்து பூமிக்கு இடையிலான தூரம் அதிகமாக இருக்கும் நாள் எது? ……………………
(4) ஒரு நிமிடத்திற்கு சாதாரண மனிதன் எத்தனை முறை கண்மூடி திறக்கிறான்? ……………………
(5) AIDS நோயினால் அதிகம் பாதிக்கப்படும் மக்கள் எங்குள்ளனர் ?……………………
(6) லீப் வருடம் யாரால் உருவாக்கப்பட்டது? ……………………
(7) உலகில் யாருக்கு அதிக சிலைகள் எழுப்பப்பட்டுள்ளன? ……………………
(8) தமிழ் சுருக்கெழுத்து முறையை உருவாக்கியவர் யார்? ……………………
(9) இன்டர் நெட்டைக் கண்டு பிடித்தவர் யார்? ……………………
(10) சிறுநீர் அடர்த்தியை அறிய பயன்படும் கருவிஎது? ……………………
(11) நில நடுக்கத்தின் பாதிப்பை அறியப்பயன்படும் கருவி யாது? ……………………
(12) பாக்கு நீரிணையை முதலில் நீந்தி கடந்த தமிழர் யார்? ……………………
(13) 188 நாடுகளின் தேசிய கீதங்களைப் பாடி சாதனை படைத்தவர் யார்? ……………………
(14) சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்படும் உயர் விருது யாது? ……………………
(15) இந்தியாவில் குங்குமம் விளையும் பிரதேசம் எது? ……………………
(16) மனித உரிமைகள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு எது? ……………………
(17) இந்தியாவின் மிக முக்கிய கடற்படைத்தளம் எங்கு அமைந்துள்ளது? ……………………
(18) எல்லோருக்கும் பொருந்தக்கூடிய குருதிவகை எது? ……………………
(19) வினாகிரியிலுள்ள அமிலம் எது? ……………………
(20) இரத்த அழுத்தத்தை அறிய உதவும் கருவியின் பெயர் என்ன? ……………………
(21) கழுதைப்பால் எந்த நோய்க்கு அருமருந்தாகிறது? ……………………
(22) தடித்த தோலை உடைய பிராணி எது? ……………………
(23) பின்புறமாக பறக்கும் பறவை எது? ……………………
(24) அதிக நீர் அருந்தும் பறவை எது? ……………………
(25) முதலில் தொலைக்காட்சி நிகழ்ச்சி எங்குஎப்போது ஒளிபரப்பப்பட்டது? ……………………
(26) விமானம் நிறுத்தி வைக்கும் இடம் எது? ……………………
(27) கறிவேப்பிலையில் அடங்கி உள்ள விற்றமின்கள் எவை? ……………………
(28) வைரம் ஆக்கப்படும் மூலகம் எது? ————
(29) PVC இன் விரிவாக்கம் யாது? ————
(30) மின்கலத்தில் பயன்படுத்தப்படும் அமிலம் எது? ————
(31) டெங்கு காய்ச்சல் பரப்பும் நுளம்பு எது? ————
(32) கருவைக் கொண்ட செங்குழியமுடைய விலங்கு எது? ————
(33) ஏலக்காய் தாவரத்தின் எப்பகுதி? ————
(34) மலேரியா எதிர்ப்பு மருந்து எது? ————
(35) புகையிலுள்ள நச்சுத் தன்மையான இரசாயனப் பொருள் எது? ————
(36) குருதி உறைதலுக்கு வேண்டிய விற்றமின் எது? ————
(37) உலகில் மிகப் பெரிய சட்டசபை எங்குள்ளது? ————
(38) ஆசியாவிலுள்ள ஒரேஒரு கிறிஸ்தவ நாடு எது? ————
(39) கின்னஸ்புத்தகம் உள்ள நாடு எது? ————
(40) உலகில் பெரிய வனம் எங்குள்ளது. ————

குறிப்பு:-
இதற்கான விடைகளை 13-04-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் பகுதி வினா இல. 08

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

முழுப்பெயர்:- ……………………………………

சொந்த முகவரி:- ……………………………………

கையொப்பம்:- ……………………………………

இப்படிவத்தைப் பூரணப்படுத்தி உங்கள் விடையுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

★ வவுனியாவில்

# போலி வதிவிட அனுமதிப்பத்திரம் தயாரித்த நிலையம் கண்டுபிடிப்பு

(வவுனியா)

வவுனியாவில் போலியான முறையில் பொலிஸ் வதிவிட அனுமதிப்பத்திரம் தயாரிக்கும் நிலையம் ஒன்றை வவுனியா விசேட பொலிஸ் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையத்தை நடாத்தி வந்தவர்களில் முக்கிய நபர் கைதாகியுள்ளதுடன் கணனி உட்பட முக்கிய தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நகருக்கு அண்மையில் உள்ள ஒருதனியார் வீட்டிலேயே இந்நிலையம் இயங்கி வந்துள்ளது.

கணனி மூலம் தயாரிக்கப்பட்ட இவ்வனுமதிப்பத்திரத்துடன் றப்பர் முத்திரையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் வழங்கும் அனுமதிப்பத்திரம் போலவே இவ் வதிவிட அனுமதிப்பத்திரமும் காணப்படுகிறது.

இதனை அடுத்து வவுனியாவில் 3 மாத வதிவிட அனுமதிப்பத்திரங்கள் யாவும் செல்லுபடியாகாதுஎனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ச-103)

# சமாதானம் மலர அரசு - எதிர்க்கட்சி இணைந்து முயல்வது சிறப்பானதே

## கல்வாரி பிரதம போதகர் பாராட்டு

''நாட்டின் கொடியயுத்தத்தை ஒழித்துக்கட்டி சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து செயற்படுவது நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கான நல்ல அறிகுறியாகும் என்று வந்துரம்பை வெவ்வல கல்வாரித் தேவாலயத்தின் பிரதம போதகர் டி. துரைராஜா கருத்து வெளியிட்டுள்ளார்.

''இன்று நாடெங்கும் சமாதானக் குரல் ஒலித்துவருகிறது. மக்கள் இன்று சமாதானம் வேண்டி பிரார்த்திக்கின்றார்கள் இந்நிலையில் மேற்படி இருவரும் இணைந்திருப்பது வரவேற்கத்தக்கது'' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (சி]

# பொது அறிவு வினா இல. 07

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

(01) சு. சுபாஷினி, கொடிகாமம்.
(02) வே. தேவஞானேஸ்வரன், மிருசுவில்.
(03) ந. கோசலா, ஓட்டுமடம்.
(04) த. கிரிஷாந்தி, நல்லூர்.
(05) செ. நிசாந்தன், மிருசுவில்.
(06) செ. வசந்தகுமாரி, நல்லூர்.
(07) சி. திவாகரன், சாவகச்சேரி.
(08) வ. வாசுகி, கொக்குவில்.
(09) அ. ரமணன், நெடுந்தீவு.
(10) தெ. யாழினி, வேலணை.
(11) த. சுதர்சனா, ஆனைக்கோட்டை.
(12) த. வாகீசன், மானிப்பாய்.
(13) த. வனிதா, உரும்பிராய்.
(14) உ. கோகுலன், ஊர்காவற்றுறை.
(15) ப. கஜந்தன், சாவகச்சேரி.
(16) அ. அச்சுதன், பளை.
(17) இ. நிலானி, மட்டுவில்.
(18) அ. மீரா, பண்டத்தரிப்பு.
(19) க. மாலினி, வண்ணார் பண்ணை.
(20) ச. சாந்தினி, சுன்னாகம்.
(21) வே. வேந்தன், கல்வியங்காடு.
(22) ச. சுகிர்தா, உசன்.
(23) ப. ஜெந்தினி, மிருசுவில்.
(24) த வானதி, கொழும்புத்துறை.
(25) சி. கார்த்திகா, ஆனைப்பந்தி.
(26) க. நிசாந்தினி, கொக்குவில்.
(27) ச. ராகவன், மட்டுவில்.
(28) ம. யனுசுயா, அத்தியடி,
(29) அ. தேவிகா, நல்லூர்.
(30) பி. உஷா, திருநெல்வேலி.
(31) இ. சுரேஷ், திருநெல்வேலி.

# பொது அறிவு வினா இல. 07 இற்கான விடைகள்

1] சீனா
2] மொண்ட் கொலியர்
3] பரநீற்
4] கிறிஸ்ரி பேனாட்
5] மைக்கல் பரடே
6] திரிபோலி
7] கேப்டவுன்
8] டாக்கா
9] பாரிஸ்
10] பீக்கிங்
11] ஸ்யோட்டி
12] குரோணர்
13] ரூபா
14] டொலர்
15] பெஸோ
16] தென்கொரியா, தாய்வான், ஹங்காங், சிங்கப்பூர், தாய்லாந்து?
17] 1869 இல்
18] நமீபியா – எடோஷா நஷனல் பார்க்
19] மெக்சிக்கோ
20] ஐரோப்பா
21] விங்கு ஆதர்ஷ் - இந்தியா
22] சிரிஜா பிரசாத் கொப்ராலா
23] ஆல்பட்ராஸ்
24] 1989
25] பிலிப்பைன்சில் - ரேமர் மக்சசாய நினைவாக
26] சூடான்
27] புதியமலர்
28] டினியா சோலியம் ஒட்டுண்ணி
29] அலெக்சாண்டர் பிளேமின்
30] 1907 ஜீலை 4
31] வெளவால்
32] ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தித் தாபனம்
33] கியூபா
34] 1924 இல்
35] ஒரு வருடத்திற்கு 95 தடவை
36] 1857 இல்
37] வைரம்
38] குதிரை
39] சிங்கம்
40] பிறேசில்

# இன்று பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்க, பழையமாணவர் சங்கம் பொதுக் கூட்டம் இன்று பி. பகல் 3. 00 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணமும். நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம்பெறும். (க)

# உடுபுடவை சேகரிக்கும் இளைஞர்குழு

(ஈச்சமோட்டை)

போர் நடவடிக்கையால் இடம் பெயர்ந்து பாண்டியன்தாழ்வு பகுதியில் தங்கியிருப்போர்க்கு வழங்குவதெற்கென உடுபுடவைகள் சேகரிக்கும் பணியினை பாண்டியன்தாழ்வு அன்னாள் இளைஞர் மன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் தங்கியுள்ள மக்களின் அடிப்படை வசதிகளை தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-59)

# நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சிவதொண்டர் ஏரம்பு-தம்புவின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள சர்வோதய பணிமணையில் இடம் பெறவுள்ளது.

சர்.வோதய அமைப்பாளர் க. திருநாவுக்கரசு தலைமையில் மேற்படிவைபவம் இடம்பெற உள்ளது. (க)

# இரண்டாம் ஆண்டு பூர்த்திவிழா

(அரியாலை)

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டப இரண்டாம் ஆண்டுப் பூர்த்தி விழா எதிர்வரும் 10 ஆம் திகதி (10/4) திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

தேவாரம் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் ஆசியுரையை நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய. சுவாமிகள் வழங்குவார் தலைமையுரையை கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்துவார்.

தொடர்ந்து துர்க்கா புரம் மகளிர் இல்லத்தினரின் பண் இசைஇடம்பெறும் சிறப்புரையை பிரபல சமயப் பேச்சாளர் ஆறுதிரு முருகன் வழங்குவார். [க-106]

# நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு திணைக்களகத்தின் புதிய பிரதம பாதுகாப்புஅதிகாரியாக சிரேஸ்ட பாதுகாப்புப்பரிசோதகர் எல்.இரவீந்திரன்பல்கலைகழகநிர்வாகத்தால்நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சிறந்த விளையாட்டு வீரரும் சமூகசேவையாளரும் பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் ஆவார். (க)

### நேபாளத்தில்

## மாவோ கிளர்ச்சிவாதிகள் தாக்கு 4பொலிஸார் உட்பட 9பேர் பலி

(காட்மண்டு)

நேபாளத்தில் மாவோ கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் 4 நேபாளப் பொலிஸார் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர்.

இதேசமயம், காட்மண்டுவில் இருந்து 400 கிலோமீற்றர் கிழக்கே உள்ள இடமொன்றில் ஏற்பட்ட பொலிஸார் மாவோ கிளர்ச்சிவாதிகளுடனான மோதலின்போது, 5 கிளர்ச்சிவாதிகளைக் கொன்றிருப்பதாக நேபாள அரசசார்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இருந்தபோதிலும், தமக்காகப் பொலிஸார் மேற்கொண்டுவரும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று திட்டமிட்டபடி வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறுமென மாவோ கிளர்ச்சிவாதிகள் அறிவித்துள்ளனர். (உ)

## ஜப்பான் வடகொரிய பேச்சு இன்று

(ரோக்கியோ)

கடந்த 7 வருடங்களாக பிளவுபட்டுக்காணப்பட்ட ஜப்பான் வடகொரிய இராஜதந்திர உறவுகளைப் புதுப்பிக்கும் வகையில் இருநாட்டு அதிகாரிகளும் சந்தித்துப் பேசவுள்ளனர். (உ)

## ரூ. 13 கோடி ஹெரோயின் கடத்தல் இலங்கையர் அறுவர் கைது

### தமிழகக் கடலில் சம்பவம்

(சென்னை)

தமிழ் நாடு - தூத்துக்குடி அருகே இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 13 கோடி ரூபா (இந்திய நாணயம்) ஹெரோயின் போதைவஸ்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி இம் முயற்சியை முறியடித்தனர்.

தகவலொன்றின் பேரில் முறியடிக்கப்பட்ட இக்கடத்தல் முயற்சியில் ஈடுபட்டவர்கள் அறுவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## 'மேயர் ஸ்டாலின் பதவி விலக வேண்டும்' ஜெயலலிதா வலியுறுத்து

(சென்னை)

சென்னை மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட் முன்னதாகவே வெளியாகிவிட்டது. எதிர்க்கட்சித் காங்கிரஸ்தலைவர் கராத்தே தியாகராஜன் மேஜர் மு. க. ஸ்டாலின் பட்ஜெட்டை சபையில் வெளியிட முன்னரே அதை பத்திரிகையாளர்களிடம் வழங்கியிருக்கிறார். ஆகையால் மேயர் பட்ஜெட் இரகசியம் வெளியானதால் பதவி விலகவேண்டும்.

இவ்வாறு அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தி உள்ளார்.

''மேஜர் பதவிவிலக மறுத்தால் அவரை முதல்வர் கருணாநிதி மேஜர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும். அல்லது மாநகராட்சி மன்றத்தைக் கலைக்க வேண்டும். ஆளுநர் தலையிட்டு மேற்படி மன்றத்தைக் கலைத்து ஜனநாயக மரபுகளைக் காப்பாற்ற வேண்டும்'' என்றும் கோருகிறேன் என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார். (சி)

## உகண்டா படுகொலைச் சூத்திரதாரி 'கன்னி மரியாள் தரிசனம் பெற்றபெண்?

(கம்பாலா)

உகண்டாவில் இடம்பெற்ற மதக்கொலைகளின் சூத்திரதாரி கன்னிமரியாளின் தரிசனம் பெற்றதாகக் கூறும் பெண்ணொருவரே என்பது தீவிரவிசாரணைகளினின்றும் புலனாகியுள்ளது.

1988 ஆம் ஆண்டில் கன்னி மரியாள் தனக்குத் தரிசனம் தந்ததாகக் கூறியதுடன் மறு வருடமே புதிய மத அமைப்பினை ஆரம்பித்து போதனைகளை இப்பெண் நடாத்தி வந்தார் எனவும்,

கடந்தவருட இறுதிப் பகுதியில் உலகம்அழியுமெனக்கூறி தீவிர மத ஆதரவாளர்களது சொத்துக்களை தந்திரமான முறையில் கைப்பற்றிய போதும்,

தனது கூற்றுப் பொய்த்ததையடுத்தே இந்தவிபரீத நடவடிக்கையில் இறங்கியதாகவும் அப்பெண்ணின் கணவர் ஒப்புக்கொண்டிருப்பதாக உகண்டாச்செய்திகள் தெரிவித்துள்ளன. (உ)

### ஆஸி. வட - கிழக்கில் பெருமழை, புயற்காற்று

## மலைச் சரிவு அச்சத்தால் 400 பேர் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டனர்

(கான்பரா)

அவுஸ்திரேலியாவின் வட - கிழக்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட புயற்காற்றுடன் கூடிய கடும்மழை காரணமாக அப்பகுதி மக்கள் தத்தம் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடும்மழை, புயற்காற்று காரணமாக ஏற்படும் மலைச்சரிவினால் வீடுகள் புதைந்துவிடக்கூடும் என்னும் அச்சம் காரணமாக அப்பகுதிவாழ் 400 பேர் வெளியேற்றப் பட்டனர்.

விழிப்புடன் இருந்த அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களை வெளியேற்றியதனால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன இருந்தபோதிலும்,

பலகோடி மதிப்புள்ள குடியிருப்பொன்று நிலச்சரிவு காரணமாய் மண்ணில் புதைந்துபோய் விட்டதாகக் கூறப்படுகிறது. (சி-உ)

# பெண் எனும் ஆக்க சக்தியின் உயிர் மூச்சில்தான் சமுதாயம் இயங்குகிறது

### சென்னை மாநாட்டில் ராஜம்கிருஷ்ணன் உரை

(சென்னை)

''கடந்த பத்தாண்டுகளில் மிக வேகமாக வளர்ந்து செல்வாக்குப் பெற்றிருக்கும் உலகையே உள்ளங்கையில் கொண்டுவரக் கூடிய தகவல் தொழில்நுட்பக்கணணியைப் பயன் படுத்தும் துறைகளிலும் பெண்கள் பெருமளவில் தங்கள் திறமையை வெளிப்ப

## உலக தரிசனம்

டுத்தி வருகினறனர்'' என்று தமிழகத்தில் மிகப் பிரபல்யம் மிக்க ஒருவராகத் திகழும் ராஜம் கிருஷ்ணன் புத்தாயிரத்தில் பெண்ணுரிமை மேம்பாடு'' என்னும் பொருள் பற்றி சென்னையில் நிகழ்ந்த மாநாடு ஒன்றில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் 'ஆணின் ஆளுகைக்கு உட்படுத்தும் ஓர் அடிமை மரபுக்குத் தலை வணங்கியவளாகவே சுயசால்பின்றி இயங்கி வந்திருக்கிறாள் பெண் அவளுடைய சிறப்பாற்றலை அடிமைகொள்ள ஆணியம் அவருடைய அறிவுக் கண்களைக் குருடாக்கி வைத்தது,

ஒருவனுக்கே தன் உடல் உழைப்பாற்றல் எல்லாவற்றையும் உரித்தாக்கும் கட்டாயக் கற்பு ஆசாரத்தில் அவனுக்குத்தன் உடல் மீதுள்ள சுய உரிமையும் கூட முடங்கிப் போயிற்று.

ஒருபெண் எத்துறையிலும் தேர்ச்சி பெற்று உயர உயரச் சென்றாலும் அவள் ஓர் ஆணுக்குரியவளாக ஒரு மனைவியாகும் பதவியை எய்தினாலே சமுதாய மதிப்பை பெற முடியும் என்ற பாரம்பரியக் கருத்து மேலும் வலிமைபெற்றிருக்கிறது. அந்த வகையில் ஆணின் கல்வி பொருளாதார ஆற்றல் சிறப்புகள் பெருமளவில் விலை பேசப்படும் வாணிப மதிப்பையும் பெற்றிருக்கின்றன. இந்த வாணிப மதிப்புக்குள் அவளுடைய பல வீனங்கள் குறைபாடுகள் சுத்தமாக மறைந்து யோகின்றன.

குடும்பத்தில் முடிவெடுக்கும் உரிமை மக்களைப் பெற்று வளர்ப்பதில் பொறுப்புடன் பயன்களைக் கோரும் உரிமை உழைப்புடன் வசதிகளையும் அனுபவிக்கும் உரிமை இந்த உரிமைகளை ஆணியம் பெண்ணுக்கு வழங்கத் தயாராக இல்லாத நிலையையே பெரும் பாலும் காண்கின்றோம்.

உடலும் உணர்வும் இணைந்ததோர் ஆக்க சக்தியின் இயற்கை வடிவம் பெண் இந்த சக்தியின் உயிர் மூச்சில் தான் சமுதாயம் இயங்குகின்றது'' என்று சொன்னார். [சி]

### கைதின் எதிரொலி

## வெகுண்டெழுந்த சேர்பியர், நேட்டோ படைகள் மோதல் 27 பேர் காயம்

கொசாவாவில், நேட்டோ படைகளுக்கும் சேர்பியர்களுமிடையே ஏற்பட்ட மோதல்களில் 27 பேர் காயமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொசோவாவின் கிராமப்பகுதி வீடொன்றினை முற்றுகையிட்ட நேட்டோ படையினர் இரு கைக்குண்டுகளை அங்கு மீட்டிருந்தனர்.

இதனையடுத்து சேர்பியர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இச்சம்பவத்தால் கோபமுற்ற சேர்பியர், கைதுசெய்யவந்த நேட்டோ படையினரைச் சூழ்ந்து நின்று வெளியேற விடாது தடுத்தபோதே கலவரங்கள் வெடித்ததாகக் கூறப்படுறது.

மேற்படி சம்பவத்தைக் கேள்வியுற்ற மேலும் ஒரு தொகுதி சேர்பியர் அவ்விடத்திற்கு விரைய முற்பட்ட வேளையில் போலந்து படையினர் வீதித்தடைகள் போட்டு அவர்களை தடுத்த வேளையிலும் மோதல்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. (உ)

### செய்திக் குவியல்

அடுத்த மாதம் 17 ஆம் திகதி விளாடிமிர் புட்டின் ரஷ்யா ஜனாதிபதியாகப் பதவி ஏற்க இருக்கிறார்.

சர்வாதிகாரத்திற்கு எதிராக அணி திரளுமாறு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் மக்களைக் கேட்டிருக்கிறார்.

நேற்று மாவோ கிளர்ச்சி வாதிகள் பங்களா தேஷில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் செய்தனர்.

பெரியார் அணை பற்றி தமிழ் நாடு முதல்வர் மு. கருணாநிதியும் கேரள முதல்வர் நாயரும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

வளை குடாப் பகுதியில் தடை செய்யப்பட்ட எண்ணையை ஏற்றிச் சென்ற ஈராக் காப்பலை ஈரான் கைப்பற்றியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

ரஷ்யாவின் விண்வெளி நிலையத்தை திரும்பவும் இயங்க வைப்பதற்கு இருவரை ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பிவைத்துள்ளது. (து)

### முழுஉலகமும் ஆவலுடன் எதிர் பார்த்த தீர்ப்பு

## நவாஸ் ஷெரீபுக்கு ஆயுட் சிறை ஏனையோர் நிரபராதிகளென விடுதலை

[இஸ்லாமபாத்]

பலத்த எதிர்பார்ப்புக்கும் எதிர்ப்புக்கும் இடையே முன்னாள் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்கராச்சி பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் நேற்று ஆயுட்சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவருடன் குற்றம் சாட்டப்பட்ட இவரது சகோதரர் உட்பட மற்ற ஆறுபேரையும் குற்றமற்றவர்களென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சிறையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்ட நவாஸ்ஷெரீப் உட்பட்ட அனைவரும் கராச்சி பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

பயங்கரவாதத் தடுப்பு நீதிபதி ரஹ்மத் குஷேன் ராப்தி இவர்களுக்கான தீர்ப்பினை வழங்கினார். உள்நாட்டு வெளிநாட்டுப்பத்திரிகையாளர் தீர்ப்பை அறியும் வகையில் நீதிமன்றத்தில் குழுயிருந்தனர்.

இதேசமயம் ஆட்கடத்தல் விமானக் கடத்தல் கொலை முயற்சி போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நவாஸ் ஷெரீப் மீதான தீர்ப்பு கடுமையானதாக இருக்கும் பட்சத்தில் பாகிஸ்தான் அரசு பலத்த பின்விளைவை எதிர்நோக்க வேண்டி வரும்என ஷெரீப்பின் மனைவி எச்சரிக்கை விடுத்திருத்தது தெரிந்ததே. கடும் தீர்ப்புவழங்கினால் பாகிஸ்தான் உலகில் தனிமைப் படுத்தப்படும் என்று பூட்டோவின் பசன் பெனாஸிர் கூறியிருந்தார்,

எது எப்படி இருப்பினும் ஷெரீப் மீதான தீர்ப்பு குற்றத் வழங்கப்பட்டதன் பின் அங்கு நிகழவுள்ள அரசியல் மாற்றத்தினை அவதானிப்பதற்காக உலகத்தின் கண்கள் பாகிஸ்தான்பக்கம்திரும்பி இருப்பது உலகம் முழுவதும் இத்திர்ப்பு பற்றி அறிந்து கொள்ள ஆவலுடன் இருந்ததும் குறிப்பிடத்தக்கவை. (உ-சி)

## வன் முறைகளைக் கைவிட்டால் தீவிரவாதிகளுடன் பேச அரசு தயார்

### உள்துறை மந்திரி அறிவிப்பு

(புதுடில்லி)

தீவிரவாதக் குழுக்கள் வன்முறைப் போக்கைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த அரசுடன் முன்வந்தால் அரசியல் சாசன வரையறைக்குட்பட்ட வகையில் அதற்கு அரசு தயாராகவே உள்ளது.

இவ்வாறு இந்தியஉள்துறை அமைச்சர்எல். கே. அத்வானி செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அரசின் இந்த நிலைப்பாடு ஜம்முகாஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் பொருந்தும் என்றும் அவர் மேலும் சொன்னார். (சி)

நல்லூர் கிளை நூலகம்



புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து

- குறள்

வலம்புரி

## நல்லதோர் பகை

படையினர் என்றால் பயங்கரமானவர்கள் என்ற கருத்து பொதுவானதே. அவர்களிடத்தில் நேர்மையும் கண்ணியமும் இல்லை என்று கூறி விட முடியாது. இலங்கையில் இந்திய அமைதிப் படை தங்கியிருந்த காலத்துச் சங்கதி ஒன்றையே குறிப்பிட விரும்புகிறோம். இந்திய அமைதிப்படைக்கு தலைமை வகித்து வந்த முதலாவது தளபதி ஜெனரல் ஹர்கிரத்சிங் அவர்களது நேர்மையையே குறிப்பிட விழைகிறோம்.

நள்ளிரவு வேளை தளபதியைச் சந்திக்க விடுதலை வேட்கை கொண்ட பிரபாகரனும், மாத்தையாவும் சென்றிருக்கின்றனர். அவர்களைச் சுட்டுத் தள்ளுமாறு டிக்ஷித்திடமிருந்து உத்தரவு வந்தது. அதனை நேர்மைத் திறனோடு உதறித் தள்ளிய உள்ளத்தினர் அவர். வெள்ளைக் கொடிக்குக் கீழ் வந்தவர்களை அவ்வாறு செய்ய முடியாது என்று ஆணித்தரமாகக் கூறிய காக்கிச்சட்டைக் காரர் மனிதம் நிரம்பிய உயர்ந்தவரே.

சண்டை மூண்ட பின்னும் பிரபாகரனுடன் தொடர்பு வைத்திருந்தீர்களா என்ற வினாவிற்கு வந்த விடை மேலும் உயர்ந்தது. சண்டை மூண்ட பின்னும் தொடர்பு வைத்திருந்தேன். காரணம் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரே மனிதர் பிரபாகரனே என்பதனாலாகும்.

இங்கு ஒன்றை சமாதானம் மலரப் போகும் வேளையில் உன்னிப்பாக உணரலாம். நல்லதோர் பகையெனப் பாராட்டப்பட்ட பிரபாகரனும், சமாதானத்தின் தேவையை உணர்ந்த சந்திரிக்கா அம்மையாரும் பரஸ்பரம் இதய சுத்தியுடன் முயன்றால் சமாதானம் மலராமற் போகாது.

தாயக வேட்கைக்கு ஆகுதியாக்கும் உயிராயுதங்கள் மேலும் தொடர்ந்து அழியாது சுதந்திர மூச்சுடன் சுந்தரத்தீவில் சுய நிர்ணயத்தை அனுபவிக்க எதிர்நோக்கும் சமாதானம் மலர்ந்திடுக.

தன்னைப் போல் பிறரை நேசிக்கும் தகவுடமை இருபாலாரிடமும் மலர்வதாக. வேற்று நாட்டான் வியந்த நல்லதோர் பகைமை பிறந்த நாட்டாருடன் பிறழ்விலாப் பேச்சில் வெற்றி காணட்டும்.

-அன்புடன் ஆசிரியர்

# ஒரே பாதையில் பறவைகள் பயணம்

# விஞ்ஞான உலகம் வியப்படைகிறது

### அத்தியாயம் 2

விலங்கினங்கள் தமது மீளாந்த உணவிற்கான இடம்பெயர்வின் போதும், காலநிலை மாற்றத்தின் போது தொலை தூர இடம் பெயர்வின் போதும் விசித்திரமான திசையறியும் ஆற்றலை வெளிக்காட்டுகின்றன. இவ் வகை இடம்பெயர்வுகள் பகற் பொழுது, சீரான காலநிலை நிகழும் போது மட்டுமல்லாது இரவு வேளை சீற்ற காலநிலை ஏற்படும் போதும் மேற் கொள்ளப்படுகின்றன. நேரத்தை அறியும் ஆற்றலும், திசையை அறியும் ஆற்றலும் சரிவரப் பெற்றிருந்தாலொழிய அவ்வகையிலான இடம்பெயர்வுகள் சாத்தியப்படமாட்டாது. ஒன்றுடனொன்று தொடர்பு படுத்தப்பட்டதான (Inter related) கடிகாரம், (Clock) திசையறி கருவி (Compass) என்பவை உடலின் உட்கட்டமைப்பில் இணைந்துள்ளன என்றால் அது மிகையாகாது.

தொலை தூர இடம் பெயர்வு இரு வகையாகப் பிரிக்கப்படலாம்.

1) இலக்கொன்றினை நோக்கித் திசைப்படுத்தப்பட்ட இடம்பெயர்வு (goal orientation)

2) குறித்த திசையிலான இடம்பெயர்வு one-direCtion orientatin)

முன்னையது இலக்கொன்றினை தெரிவு செய்து அதன் திசை கோளின் பயணத்தை மேற்கொள்வது. பின்னையது குறித்த திசையினை தேர்ந்தெடுத்து சென்றடையும் இடம் பற்றிய அக்கறையில்லாது பயணத்தை மேற்கொள்வது.

சூரியன் காலையில் கிழக்கே உதித்து மாலையில் மேற்கே மறைகின்றது. சராசரியாக 12 மணித்தியாலக காலப் பகுதியில் 180 பாகை கோணம் பூமி சார்பாக இயங்குகின்றது ஆகவே அதன் பூமி சார்பான கோணவேகம் 1 மணித்தியாலத்திற்கு 15 பாகை ஆகும் இதன் காரணமாக தமது பயணத்தின் போது ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் விலங்குகள் தமது இயக்கத் திசையினை 15 பாகை இனூடு திருப்புகின்றன. இதிலிருந்து அவை தமது திசைப்படுத்தலுக்கு சூரியனையே அடையாளப் பொருளாகப் பயன் படுத்துகின்றன என்பது தெளிவாகின்றது. எனினும் பகற்பொழுது 12 மணித்தியாலம் அல்லாது நீண்டு குறுகும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்கேற்ப 1 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை திரும்பும் கோணம் மாற்றமடைவது கண்டறியப் பட்டுள்ளது. இரவுப் பொழுதில் சந்திரனையோ, நட்சத்திரங்களையோ அடையாளப் பொருளாகக்கொண்டு பயணம் தொடர்கின்றது.

### பறவைகளின் நடத்தை

ஒவ்வொரு பயணத்தின் போதும் ஒரே பாதையில் பறவைகள் பயணம் செய்வதை அறிந்து விஞ்ஞான உலகம் வியக்கின்றது. இது முன்னைய அனுபவங்களினாலோ, பயிற்சியினாலோ விளைந்திருக்கலாலம் என்ற சந்தேகம் எழவாய்ப்புண்டு ஏனெனில் நோர்வே நாட்டு வாத்துக்கள் 'குடும்ப சமேதராகவே' பயணத்தினை மேற்கொண்டு மீண்டும் திரும்பி வருகின்றன. அனுபவம் மிக்க தலைமைத்துவம் இச்சந்தர்ப்பங்களில் உதவியிருக்கலாம். என்னும் ஐரோப்பிய 'குக்கூ, இன (Europen Cukoos) இளம் பறவைகள் முதிர்ந்த பறவைகளின் உதவியின்றியே தமது முதல் பிரயாணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு பாதுகாப்பாக 'வீடு' திரும்பியிருக்கின்றன. 'இளசுகளின்' முதலாவது உல்லசகப் பயணம்(?) ஆரம்பத்தில் சற்று வேறுபட்டதாக இருந்த போதிலும் பெரும்பாலும் பிரதான பாதைக்கு சமாந்தரமாகவே அமைந்து விடுகின்றன. பறவைகள் நன்து வரையறுக்கப் பட்டதும் நன்கு திட்டமிடப்பட்டதுமான பயணத்தைமேற்கொள்வது புலனாகின்றது. இவ் வியல்பு பழக்கத்தினாலன்றி பரம்பரையாகவே அவற்றிற்கு ஏற்பட்டதாகும்.

### தொலை தூரப் பயணம்

தொலை தூரப் பயணத்தின் போது யாரொருவரால் இவற்றை அவதானித்திருந்திருக்க முடியுமென வாசகர் சந்தேகிக்கலாம் 1949 இல் ஜேர்மனியைச்சேர்ந்தவரான கிராமர் என்பவர் (G Kramer) இது சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டார். மட்டுப்படுத்தப்பட்ட (Conffned) பிரதேசத்தினுள் பறவைகளின் நடத்தை அவதானிக்கப்பட்டது. சிறப்பான நுட்பமுறையை கையாண்டு, அவர் பகல் வேளைகளில் திசையை அறிவதற்காக பறவைகள் புவிக் காந்தப்புலத்தை அல்லாது சூரியனையே அடையாளமாக கருதிக் கொள்வதை அறிந்து கொண்டார்.

சில பறவைகள் வட்டவடிவமான கூடொன்றினுள் அடைத்து வைக்கப்பட்டு வெவ்வேறு நிபந்தனைகளில் அவற்றின் பறப்புத்திசைகள் அவதானிக்கப்பட்டது. புவிக் காந்தப்புலத்திற்கு மேலதிகமாக செயற்கையான காந்தப்புலம் பிரயோகிக்கப்பட்ட போது அவற்றின் பறப்புத் திசைகள் முன்னையதைப் போலவே இருந்து ஆனால் தளவாடிகளைப் பயன்படுத்தி சூரியனின் (மாய) விம்பத்தினை அவை காணச் செய்யப்பட்ட போது பறப்புத் திசை மாற்றமடைந்திருந்தது.

### உணவுச்சாலை

மேலும் கூட்டினைச் சுற்றி அதிலிருந்து சமதூரங்களில் 12 சர்வசமனான உணவுச்சாலைகள் அமைக்கப்பட்டன. முதலில் யாதாயினும் ஒரு உணவுச்சாலையில் மட்டும் உணவருந்தும் பழக்கம் ஏற்பட்டது. அதாவது காலை 7மணி. மதியம் 12 மணி, மாலை 5மணி ஆகிய மூன்று தடவைகளில் மட்டும் கூடு திறக்கப்படும் கூடுதிறக்கப்பட்டதும் குறித்த உணவுச்சாலைக்கு சென்று உணவருந்தும் பழக்கத்தை அவை கொண்டிருந்தன. ஒவ்வொரு தடவையும் உணவு கிடைக்கும் இடம் சூரியன்சார்பாக எத்திசைகளில் உள்ளதென்ற விடயம் பறவைகளுக்கு பதிவாகிவிட்டிருக்கும் கூடுதிறக்கப்படும்நேரம் 6மணி, 11மணி 4மணி என்றவாறு மாற்றப்பட்டபோது அவை வேறோர் உணவுச்சாலையை தேடி பறக்கக் காணப்பட்டது. 1மணித்தியால காலப்பகுதியில் சூரியன் 15 பாகை கோணம் இயங்கியுள்ளதால் அவ்வாறு ஏற்படுகின்றது.

-வேலாயுதம் பிள்ளை தமுங்கேசன்

# சமயத்துறை சார்ந்த பலருடன் கூடிச் செல்லும் யாத்திரையே மிகச் சிறந்தது

## (வெள்ளிநற்சிந்தனை)

கங்கமாதனம்கயிலைமலை
கேதாரம் களாத்தி கழுக்
குன்றம் கண்ணார் அண்ணா
மங்கதமாம் பொழிற்
சாரல் வடபர்பதம்
மகேந்திர மாமலை நலம்
ஏமகூடம்
விந்து மாமலை வேதம்
சையம் மிக்க
வியன் பொதியின் மலை
மேரு உதயமத்தம்
இந்து சேகரன் உறையும்
மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெட
நின்றேத்துவோமே

திருநாவுக்கரசு சுவாமிகள்

யாத்திரை என்று சொல்லுகின்ற போதே இளையவர் முதல் முதியவர் வரை ஒவ்வொருவருக்கும் தாம் அடைகின்ற ஆனந்தத்திற்கு அளவில்லை. சிலருக்கு தனித்தும் பலருக்குக் கூட்டத்துடனும் யாத்திரை செல்ல விருப்பம் உடையவர்களும் இருக்கின்றார்கள். உலகியலறிவைப் பெற விரும்புகின்றவர்கள் தனித்தே செல்வார்கள்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளைக் கண்டு உண்மை ஞானம் அடைய விரும்புவர்கள் ஒத்த அறிவுடைய பலருடன் சேர்ந்தே சமயத் துறையில் செல்வார்கள். இவ்விரு பிரிவினர்களும் அடையும் உற்று நோக்கும்போது' தனித்து யாத்திரை செய்வதற்கு விரும்புகிறவர்கள் இம்மைப் பயனை அடைவர். இரண்டாமவர் இம்மைப் பயனோடு மறுமைப் பயனையும் அடைவர்.

ஆகையினால் சமயத்துறையில் பலருடன் கூடிச் செல்லும் யாத்திரையே சாலச் சிறந்தது. மேலும் யாத்திரை என்பது நம் சமுதாயத்திற்குப் புதுமையானதன்று. பழமையானதேயாகும். சைவப் பெரியார்களும் ஏனைய மதத் தலைவர்களும் யாத்திரையை மேற்கொண்டார்கள். நமக்கும் வழிகாட்டியுள்ளார்கள்.

இக் காலத்தில் இலௌகிகர்கள் பலவிதமான சாதனங்களின் மூலமாக உடல் வருத்தாத முறையில் பல விதமான சௌகர்யங்களுடன் யாத்திரை செய்வார்கள். அக்காலத்தில் இவ்வித வசதியற்ற காலங்களில் பல சாதனங்களிருந்தும் அவைகளைக் கைக்கொள்ளாமல் உடல்வருந்தும், முறையில் நடையினாலேயே அநேகமாக யாத்திரை செய்தார்கள்.

''துன்பத்தின்முடிவில்தான் இன்பம்'' என்று கண்ட அனுபவப் பெரியார்கள் உடலை வருத்தியே இறைவனைக் காண ஆசைப்பட்டார்கள். இறைவனும் அவர்களது மனவுறுதியினையும் பக்குவ நிலையையும் கண்டு அருள் கொடுத்தான். திருத்தொண்டர் புராணத்தில் இதுபற்றி விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாயனார்களுடைய பக்குவ நிலையையும் மனவுறுதிப் பாட்டினையும் நோக்கி அவரவர்கள் எம்பெருமானால் ஆட்கொள்ளப் பட்டார்கள்.

''நேபாளம்'' என்பது இந்திய தேசத்தின் வடகிழக்கில்உள்ள மலைநாடாகும். ''காட்மாண்ட'' என்பதே அதன் தலைநகரம். நேபாள அரசர் பசுபதி நாதரிடத்தில் மிக்க அன்பும் பக்தியும் கொண்டவர் என்பதனை நேரேசென்று கண்டவர்களே ஆச்சரியப் படுவார்கள் அவ் அரசருடைய கிரீடத்தில் பசுபதி நாதரின் திருவடிகளைப் பதித்திருத்தலே அதற்குச் சான்றாகும். பசுபதி நாதருக்கு நடக்கும் நித்திய நைமித்தியங்களை அங்கு சென்று தரிசிப்பது கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

கேதாரம் என்னும் திருத்தலம் இந்திய வடநாட்டில் உள்ள இமயமலையில் அமைந்துள்ளதாகவும் கயிலைமலையின் ஒரு பகுதியே திருக்கேதாரமாம். ஆறுமாதகால அளவுதான் அங்கு மக்கள்பூசை, ஏனைய ஆறுமாதகாலம் அதாவது கார்த்திகை மாதம் முதல் சித்திரைமாதம் முடியும்வரை கேதாரத்திலுள்ளவர்கள் இருபது மைலுக்குக்கீழ் உள்ள இடங்களில் வந்து தங்கிவிடுவார்கள். அநேகர் ரிஷிகேசம் முதலியஇடங்களிலும் வந்துவிடுவார்கள்.

ஆகவே வைகாசிமாதம் தொடங்கி ஐப்பசிமுடிய ஆறு மாதகாலமே கேதாரயாத்திரைக்குரியது. சித்திரைக் கடைசியில் தான் வழிகளைச் சீர்படுத்திக் கோவிலைத் திறப்பார்கள். இந்தயாத்திரைக்கு சென்று கேதார நாதரைத் தரிசித்து எம்பெருமானின் அருளைப் பெற விரும்பும் மெய்யன்பர்கள் இந்த யாத்திரையில்முன் அனுபவமுள்ள நல்லதுணைகொண்டுதான் போகவேண்டும். ★

## சாயி பஜனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாயிபாபா பஜனை இராசாவின் தோட்ட வீதியில் அமைந்துள்ள லயன் சு. நித்தியானந்தன் 'சாயி இல்லத்தில்' நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30மணிக்கு இடம் பெறும்.

இந்நிகழ்வில் சாயிபாபா பஜனை காயத்திரி மந்திர ஜெபம், தியானம், பூஜை வழிபாடுகள் என்பன நடைபெறும். (க)

# ஆயுதமோதல் இடம்பெறும் போது பாதுகாப்பை நாடும் உரிமை உண்டு

(யாழ்ப்பாணம்)

ஆயுதமோதல் இடம்பெறும் போது மக்கள்பாதுகாப்பான இடங்களை நாடுவதற்கான உரிமை ஜெனிவாஉடன்படிக்கையில் பொறிக்கப்பட்டு, சர்வதேச மனிதாபிமான சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளது. மக்களின் இவ் உரிமையை மதிக்கும்படிஇராணுவத்தினரை வலியுறுத்துங்கள்.

மேற்கண்டவாறு மனித உரிமைகளுக்கான இணையம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தற்போது போர் வெடித்துள்ள

உள்ள பொது மக்களின் நிலை பற்றி ஆழ்ந்த கரிசனத்தோடும், கவலையோடும் கீழ்க்காணப்படும் அமைப்புக்களின் பிரதிநிதிகளாகிய நாம் இம் மடலை வரைகின்றோம்.

கிளாலியில் 249 குடும்பங்களைச் சேர்ந்த 1,100 பேரும், மாசார் கிராமத்தை அண்டியுள்ள ஏழு கிராமங்களில் 900 குடும்பங்களைச் சேர்ந்த 3,500 க்கு மேற்பட்டோரும் பீதியில் வாழ்கின்றனர். அடிப்படை வசதிகளுமின்றி, எந்த நேரமும் உயிருக்கு ஆபத்து விளையக்கூடிய நிலையில் உள்ளார்கள்.

அவ் இடங்களிலிருந்து பாதுகாப்பான வேறிடங்களுக்கு அவர்கள் செல்வதற்கு தடைபோடவேண்டாமென யாழ்.

ஜெனரல் சூல செனிவிரட்ண உத்தரவிட்டிருப்பினும் குறிப்பிட்ட இடத்துக்கான அதிகாரிகள் அதை நிராகரித்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ. நா. அகதிகள் ஆணைக்குழுபோன்ற அமைப்புக்களின் முயற்சிகளும் அதிகாரிகளின் தடைகளால் இதுவரை ஆக்க பூர்வமானதாக அமையவில்லை.

மேலும் பளை, மாசார் ஆகிய இடங்கள் மீது உங்கள் கரிசனத்தை வேண்டும் அதே வேளையில் எவ்விடத்தில் தான் இத்தகைய சூழ் நிலை ஏற்பட்டாலும், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதைத் தடை செய்ய வேண்டாம் என்று இராணுவத்தினருக்கு கண்டிப்பான கட்டளையிடுமாறு வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது, (க)

## மறியற்--.

மதிக்கப் படுவதற்கே மீறப்படுவதற்கல்ல;

★ புகலிடம் தேடும் மக்களை புதைக்காதே.

★ மக்களை மதித்து நடமிதிக்காதே!

★ சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதியுங்கள்.

★ எமது மக்களைப் போகவிடு.

★ எமது மக்கள் உனது கவசமா?

★ எமது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குப் போகவிடு.

★ எமக்கு சுதந்திரம் வேண்டும்.

(வ-59)

## வெளியேற--,

ணைத் தொடர்ந்து மாபெரும் மறியற்போராட்டம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் போவதாகவும் யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கிளாலி தேவாலயத்திலிருந்த மக்களை வெளியேற அனுமதிக்கப்பட்டது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை ஆகும். உண்மையில் மேலே குறிப்பிட்ட பகுதி மக்களே விடுவிக்கப்பட வேண்டியவர்களாவர். நேற்று நடாத்திய மறியற் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு கண்துடைப்பு நடவடிக்கை ஆகும்.

மக்களை மனித கேடயமாகப் பாவித்து சித்திரவதைக்கு உள்ளாவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என மேலும் தெரிவிக்கப்படுறது.

(வ)

## கண்டித்து--

பேரணியில் கலந்து கொண்டோர் 'பேச்சுவார்த்தை வேண்டாம் உன் வேலையைக்கவனி' 'நோர்வே அரசே இனப்பிரச்சினையில் தலையிடாதே' போன்ற சுலோகங்களைத்தாங்கி ஊர்வலம் சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் அரசுக்கு எதிரானசுலோகங்களைத் தாங்கி வந்தனர் என்பதும் குறிப் குறிப்பிடத்தக்கது.

600 பேர் வரை கலந்து கொண்ட இவ் ஆரப்பாட்டப் பேரணியில் 500 பேர் புத்த பிக்குகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் அமரபுர மடிகே பஞ்சாதேரதேரர், ராமையா நிக்காயவேவல்தெனிய மூதாலங்கார தேரர் ஆகிய இருவரும் இறுதியில் உரையாற்றினர். ஊர்வலத்தில் சென்றோர்கள் தூதர் அலுவலகத்திலிருந்த நோர்வே தேசியக் கொடியை அறுத்து எரித்தனர்

(வ)

## மிருசுவில்--:

றது.

பளைப் பிரதேச செயலர் புத்திசிகாமணி சாவகச்சேரி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ். பாலச்சந்திரன் தென்மராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் சூசை முத்து அலெச்சாண்டர் ஆகியோர் இந்த நிவாரண உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

உலர் உணவுப் பொருட்கள், படுக்கைவிரிப்புகள் சமயல் பாத்திரங்கள் என்பன வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இரண்டாயிரம் ரூபா வழங்க கச்சேரி ஊடாக ஈ.பி.டி.பி. நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## கரப்பந்தாட்டப் போட்டி

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றுவரும் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பக்கல்வி ''ஏ'' பிரிவு ஆசிரிய மாணவர்களுக்கும் இந்துசமய கற்கை நெறி ஆசிரிய மாணவர்களுக்கும் இடையே நடைபெறும். (ந)

## பளையில்..

வசித்துவந்த கிராம உத்தியோகத்தர் பிரிவு முன்னர் பெற்றுவந்தநிவாரண விபரம் போன்ற விபரங்கள் கோரப்படுகின்றது.

(வ-24)

## அனைத்து பீட---

வுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் அனைத்துப் பீட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் கூட்டத்திற்கு வரும் பொழுது பிஸ்கட், பால்மா போன்ற உணவுப்பொருட்களை மிருசுவில் தேவாலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்குவதற்கு கொண்டுவருமாறும் இவ் அறிவிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(வ-வி)

## பி.பி.சி--

போது பொலிஸார் பார்த்துக்கொண்டு நின்றனர்.

இது தொடர்பாக கறுவாக்காடு பொலிஸ் நிலையத்தில் எல்மோ பெர்ணான்டோ முறைப்பாடு செய்துள்ளார் இன்று மட்டக்களப்பில் நடைபெறும் பத்திரிகையாளர்களின் ஆர்ப்பாட்டத்தில் இத்தாக்குதலையும் கண்டிக்கவுள்ளதாக இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ச)

## 28ஆம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிங்கள புதுவருடத்தை ஒட்டி இன்று வெள்ளிக்கிழமை முதல் பாடசாலைகள் [illegible] விடுமுறைக்காக மூடப்பட்டு இம் மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் இரண்டாம் தவணைக்காக திறக்கப்படவுள்ளது. (வ)

## புலிகள்--

ரங்களைபுலிகள் அறிவித்துள்ளனர்.

★ மேஜர் அன்பு (ஞானமணி சந்திரன்) மட்டக்களப்பு.

★ மேஜர் கிட்டு (வடிவேல் ராஜ்குமார்) அம்பாறை

★ மேஜர் சசிக்குமார் (சின்னத்தம்பி அமிர்தலிங்கம்) பொலநறுவை

★ 2 ஆம் லெப். சங்கர்ராஜ் (இராமசந்திரன் சசிக்குமார்) மட்டக்களப்பு

## களைத்து--

வேறுவாகன வசதியும் ஏற்படுத்திக் கொடுத்துதவினர்.

களைத்துச் சோர்வுற்ற நிலையில் காணப்பட்ட மக்களுக்கு பிஸ்கற்றுகள் நீராகாரம் என்பன வழங்கி உதவினர்.

## பிரிட்டனில்-

கின்றனர், இதைத் தடுக்கவே மேற்படி நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகிறது.

ட்ரக்கில் செல்வோரை கண்டுபிடிக்கும் ''ஸ்கானர் சாதனங்களை சில துறைமுகங்களில் பயன்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இம்முடிவுகளை அகதிகள் கவுண்சில் மற்றும் ஒக்ஸ்பாம் ஆகிய பொது நிறுவனங்கள் கண்டித்துள்ளன. (ச)

## சிக்கித்தவித்த :-

இதே வேளை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா நேற்று முன்தினம் மேஜர் ஜெனரல் சூல செனிவிரட்னாவுடன் தொடர்பு கொண்டு கிளாலியில் சிக்குண்டமக்களின் நிலை குறித்தும் எடுத்துக்கூறியிருந்தார்,

இவற்றையடுத்து நேற்று கிளாலியில் சிக்கியுள்ளமக்கள் வெளியேறுவதற்கு படைத்தரப்பு அனுமதித்தது.

இவ் அனுமதியைத் தொடர்ந்து அங்கு தங்கியிருந்த மக்கள் அனைவரும் நேற்று கிளாலி தேவாலயத்திலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் கால்நடையாக சுமார் 4 மைல் தூரம் நடந்து மிருசுவில்தேவாலயத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் ஒரு தொகுதி மக்கள் வடமராட்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடம் மாறிச் சென்றனர், இப்பயணத்திற்கு வ.பி.போ.ச. பஸ் வண்டிகள் உதவின. (வ)

## இன்று சமூகம் தரவும்

[யாழ்ப்பாணம்]

வலி-மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நிரந்தர நியமனம் கிடைக்[illegible]

களை இன்று நண்பகல் [illegible] மணிக்கு வலிமேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு சமூகம் தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளரும் வலி-மேற்கு பிரதேச சபைத் தலைவருமான என். திரிலோகநாதன் கேட்டுள்ளார்.

[சி]

## இடம் பெயர அனுமதிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பகுதியான பச்சிலைப்பள்ளி பகுதியில் வெளியேற முடியாது சிக்கியிருக்கும் மக்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர அனுமதிக்குமாறு ஜனாதிபதிக்கு ''பக்ஸ்'' மூலம் மகஜர் ஒன்றை மக்கள் ஜனநாயகப் பேரவை அனுப்பி வைத்துள்ளது.

(வ-வி)

## செயலக முன்---

வின் தலைமையில் ஏற்பாடாகிய இப்போராட்டத்தில் ஆயிரத்திற்கு அதிகமானோர் பங்கெடுத்துக் கொண்டனர்.

இதில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய அங்கத்தவர்கள் கிறிஸ்தவ குருமார் இந்து குருமார், அருட்செல்விகள், மற்றும் பொதுமக்கள் என பலதரப்பட்ட மக்களும் ஒன்றுபட்டு பங்கெடுத்தனர்.

போராட்டம் யாழ். செயலகம் முன் ஆரம்பமாக அரச அதிபர் சண்முகநாதனிடம் மகஜர் கையளிக்கப் பட்டது பின்னர் றக்கா வீதிவழியாக வந்த பேரணி யாழ் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் தமது 2வது மகஜரைச் சமர்ப்பித்தது.

பின்னர் கோயில் வீதி வழியாகச்சென்று யு. என். எச். சி. ஆர் இடம் 3வது மகஜர் கையளிக்கப்பட்டது.

அங்கு வளவினுள் உட்பிரவேசித்த பேரணியாளர்கள் யு. என். எச். சி.ஆர் அதிகாரியைச் சூழ்ந்துகொண்டனா.

அவர்களிடம் நீதிக்கும் சமாதானத்துக்குமான நல்லெண்ணக் குழுவின் தலைவர் அருட்தந்தை பேனார்ட் உட்பட குழுவின் முக்கிய உறுப்பினர்கள் மகஜ்ரைச் சமர்ப்பித்த பின்னர் மக்களின் பிரச்சினைகள் குறித்து மிகவும் தெளிவாக எடுத்துரைத்தனர்

கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அதிகாரி தான் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் நாளை 4.00 மணிக்கு உறுதியான பதில் ஒன்றைத் தான்தெரிவிப்பதாகவும் உறுதியளித்தார்.

(வ.593)


**விக்னா**

**கல்வி நிறுவனம்**

**A/L 2002**

கலை வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம் 9.4.00[8,00]

**O/LDayClass**

பிரிவு 2

ஆரம்பம் 10.04.00

8.30-2.00

**O/LEveningClass**

ஆண்டு 6,7,8,9,10

ஆரம்பம் 10.04.00

[3.15-5.30]

286



**ஸ்ரீ செல்வா**

யாழ் ஸ்ரான்லி வீதி

காலை10-30 பி.ப. 2-30

பிரகாஸ்ராஜ் நடித்த

**குருபிரம்மா**

குடும்பச் சித்திரம்

(00151]



உ

சிவமயம்

புதுவருடத்தை முன்னிட்டு...

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

**மாபெரும் மலிவு விற்பனை**

அனைத்து ஜவுளி வகைகளுக்கு இன்று 07-04-2000 முதல் மாபெரும் மலிவு விற்பனையை ஆரம்பித்துள்ளோம். என்பதனை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T, P. 2555

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.
T. P. 2985

கி177


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டுஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.